**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**STC.No.319/2022**

| | |
|---|---|
| Deposition of Witness for DW | : 1 |
| Name (திரு/திருமதி) | : சுரேஷ் |
| Father's Name/ Husband's Name | : வெங்கட்ராமன், |
| Village & Taluk | : செஞ்சி |
| Calling | : வியாபாரம் |
| Age | : 45 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2025**

(புகார்தாரர் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 256-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**முதல் விசாரணை :**

1. எனக்கும் புகார்தாரருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. புகார்தாரரை நான் முதன் முதலில் நீதிமன்றத்தில் தான் பார்த்தேன். அதற்கு முன்பு அவரை பார்த்ததும் கிடையாது அவரிடம் பேசியதும் கிடையாது. நான் செஞ்சியில் இரு சக்கர வாகனத்தின் உதிரி பாகங்கள் கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2017 ம் ஆண்டு எனது தொழில் நிமித்தமாக எனக்கு பணம் தேவைப்பட்டதால், நான் கடை வைத்திருக்கும் வணிக வளாகத்தில் GSM computer Center வைத்திருக்கும் செந்தில் முருகன் மற்றும் பாலகாமராஜ் ஆகியோர்களை அனுகி எனக்கு கடனாக யாரிடமாவது பணம் வாங்கி தருமாறு கேட்டேன். மேற்படி நபர்கள் திருவண்ணாமலையில் உள்ள அண்ணாமலை பைனான்சையும் அதில் கணக்காளராக வேலை செய்யும் பழனியப்பன் என்பவரையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தனர்.

2. கடந்த 2017 ம் அண்டு மேற்படி பழனியப்பன் எனது கடையை வந்து பார்த்துவிட்டு எனக்கு எவ்வளவு தொகை கடன் வேண்டும் என கேட்டார். நான் அவரிடம் ரூ.1,00,000/-கடனாக வேண்டும் என்று கேட்டேன். அவர் அவரது முதலாளி அருணகிரி என்பவரை கலந்து பேசிவிட்டு மறுநாள் கூறுவதாக கூறிவிட்டு சென்றார். மறுநாள் அவர் என்னை அனுகி அவரது முதலாளியிடம் பேசிவிட்டதாகவும் என்னை திருவண்ணாமலை வந்து அவரது முதலாளியை பார்க்குமாறும் கூறினார். மேலும், அவர் என்னிடம் அவரை பார்க்க செல்லும்போது இரண்டு காசோலைகளை எடுத்து செல்லுமாறு கூறினார். அதன் பேரில் நான் சிட்டி யுனியன் வங்கியில் கணக்கு வைத்துள்ள எனது வங்கி

காசோலைகளான 000093, 000094 ஆகியவற்றை எடுத்துக்கொண்டு சென்றேன். நான் அவரை சென்று பார்த்தபோது ரூ.1,00,000/– கடன் தருவதாகவும் அதனை 100 நாட்களில் திரும்ப செலுத்திவிட வேண்டும் எனவும் அவ்வாறு செலுத்தினால் அதன் பின்னிட்டு எவ்வளவு தொகை கேட்டாலும் கடனாக தருவதாக கூறினார். மேலும், மேற்படி கடன் தொகைக்காக இரண்டு காசோலைகள் மற்றும் அண்ணாமலை என அச்சிடப்பட்ட இரண்டு பிராம்சரி நோட்டுகளில் கையொப்பம் செய்து தரவேண்டும் என்று சொன்னார். அதன் பேரில் நான் பூர்த்தி செய்யப்படாத இரண்டு பிராம்சரி நோட்டுகளில் கையொப்பம் செய்து கொடுத்தேன். மேலும், அதனுடன் நான் எடுத்து சென்ற இரண்டு காசோலைகளையும் அவரிடம் கொடுத்தேன்.

3. அதன் பின்னிட்டு பல முறை மேற்படி அருணகிரி என்பவரிடம் தண்டல் கடனாக பணம் வாங்கி கடந்த 2022ம் ஆண்டு வரை கட்டியுள்ளேன். கடந்த 2022ம் வருடம் அவரிடம் பணம் வாங்கியபோது பஞ்சாப் நேஷனல் வங்கியில் நான் கணக்கு வைத்துள்ள எனது இரண்டு காசோலைகளையும் அவரிடம் கொடுத்துள்ளேன். அத்துடன் பூர்த்தி செய்யப்படாத இரண்டு பிராம்சரி நோட்டுகள், 100 ரூபாய் பத்திரம் , 20 ரூபாய் பத்திரம் ஆகியவற்றிலும் கையொப்பம் மட்டும் செய்து கொடுத்துள்ளேன்.

4. கரோனா காலகட்டம் முடிந்து கடந்த 2022ம் ஆண்டு இறுதியில் மேற்குறிப்பிட்ட பழனியப்பன் என்பவர் என்னிடம் வந்து வாங்கிய கடனை திரும்ப கேட்டார். அதற்கு நான் அவரிடம் கணக்கு பார்த்துவிட்டு பணத்தை அவரது முதலாலி அருணகிரியிடம் கொடுத்துவிடுவதாக கூறினேன். கடந்த 29.01.2023 அன்று பழனியப்பன், செந்தில்முருகன் மற்றும் பாலகாமராஜ் ஆகியோர்கள் என் கடையிடம் வந்து பணம் கேட்டு என்னை ஆபாசமாக பேசிவிட்டு சென்றனர். எனவே அவர்கள் மீது செஞ்சி வட்ட காவல் துணை கண்காணிப்பாளரிடம் கடந்த 09.02.2023 அன்று புகார் அளித்தேன். அதன் பேரில் கடந்த 14.02.2023 அன்று மேற்படி அலுவலகத்தில் இருந்து விசாரணைக்காக எங்களை அழைத்திருந்தனர். அப்போது பழனியப்பன் மட்டும் ஆஜரானார்.

5. வட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த உதவி ஆய்வாளர் மேற்படி பழனியப்பன் என்பவரை விசாரித்து என்னுடைய ஆவணங்களை என்னென்ன அவரிடம் உள்ளது என கேட்டார். அதற்கு அவர் சிட்டியுனியன் வங்கியின் எனது காசோலைகளான காசோலை எண்கள் 000093, 000094, அண்ணாமலை என அச்சிடப்பட்டிருந்த பிராம்சரி நோட்டு ஒன்று மற்றும் 20 ரூபாய் பத்திரம் ஒன்று ஆகியவற்றை காண்பித்தார். மேற்படி ஆவணங்களை நான் எனது செல்போனில் புகைப்படம் எடுத்துக்கொண்டேன்.

நாள் அளித்த மீத ஆவணங்கள் எங்கு என்று விசாரணை அதிகாரி பழனியப்பனிடம் கேட்டபோது அவரது முதலாலி இறந்துவிட்டதாகவும் அந்த ஆவணங்கள் அவரிடம் தான் இருந்தது என்றும் தற்போது எங்கு உள்ளது என்ற விவரம் தனக்கு தெரியாது என்றும் கூறினார். மேற்படி பழனியப்பன் என்னிடம் இருந்து பணம் பறிக்க முயற்ச்சி செய்ததால் நான் கணக்கு வைத்திருக்கும் செஞ்சி கிளையின் சிட்டி யுனியன் வங்கியை அனுகி எனது வங்கி கணக்கு தொடர்பான காசோலைகளுக்கு Stop Payment அளிக்குமாறு கேட்டிடுக்கொண்டேன்.

5. மேற்படி பழனியப்பன் என்பவர் விசாரணையின்போது என்னிடம் காண்பித்த 000093 என்ற காசோலையை வைத்து வேறு ஒரு நபர் எனக்கு கடந்த 03.03.2023 அன்று சட்ட அறிவிப்பு அனுப்பி இருந்தார். மேற்படி அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேன். அதில் மேற்படி காசோலை மற்றும் 000093 என்ற காசோலைகளை அண்ணாமலை பைனான்ஸ்சின் முதலாலியிடம் தான் கொடுத்தேன் என்று குறிப்பிட்டுள்ளேன். மேலும் பழனியப்பன் என்பவர் விசாரணையின்போது என்னிடம் காண்பித்த 000094 என்ற காசோலையை வைத்து இவ்வழக்கின் புகார்தாரரான பிரபு என்பவர் எனக்கு கடந்த 03.04.2023 அன்று சட்ட அறிவிப்பு அனுப்பி இருந்தார். மேற்படி அறிவிப்பிற்கும் நான் மேற்குறிப்பிட்ட பதிலையே குறிப்பிட்டு பதில் அறிவிப்பு அனுப்பி இருந்தேன்.

6. அதன் பின்னிட்டு நான் இவ்வழக்கின் புகார்தாரான பிரபு, பழனியப்பன் மற்றும் சரவணன் ஆகியோர்கள் மீது விழுப்புரம் மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். அங்கு மேற்படி நபர்கள் யாரும் விசாரணைக்கு ஆஜராகவில்லை. மேற்படி காவல் நிலையத்தில் நான் அளித்த புகார் மீதான நடவடிக்கை குறித்து கேட்டபோது அவர்கள் திருவண்ணாமலையில் புகார் அளிக்குமாறு கூறினார்கள். எனவே நான் திருவண்ணாமலை மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் மேற்குறிப்பிட்ட 3 நபர்கள் மீதும் புகார் அளித்தேன். அங்கு அவர்களை விசாரித்து அவர்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு அதன் பேரில் திருவண்ணாமலை நீதிமன்றத்தில் வழக்கும் நிலுவையில் உள்ளது. இந்த வழக்கிற்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது. நான் அண்ணாமலை பைனான்சில் தான் கடன் பெற்றேன். எதிரியிடம் இருந்து கடன் பெறவில்லை.

7. மேலும், மேற்படி அண்ணாமலை பைனான்சின் உரிமையாளரும் மேற்படி பழனியப்பன் மீது திருவண்ணாமலை மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். நான் அண்ணாமலை பைனான்சில்

கொடுத்த காசோலைகளை மேற்படி பழனியப்பன் திருடி கொண்டு வந்து இவ்வழக்கின் புகார்தாரரிடம் கொடுத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

8. எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/– B.Vidhya,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.